பக்கங்கள்:-13

# காலை முரசு

## தமிழ் ஊடகத்துறையில் நிரப்ப முடியாத வெற்றிடம்

### பாரதியின் மறைவுக்கு கலைப்பீடாதிபதி இரங்கல்



தமிழ் ஊடகத்துறையில் நிரப்ப முடியாத வெற்றிடமாக சிரேஷ்ட 06

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | தை 29 | திங்கட்கிழமை | 10.02.2025 | அதிர்வு 192




## மின் தடைக்கான காரணத்தை கண்டறிய விசேட விசாரணை

### இலங்கை மின்சார சபை தெரிவிப்பு

நாடாளாவிய ரீதியில் நேற்று ஏற்பட்ட மின்சார விநியோகத் தடைக்கான காரணத்தைக் கண்டறிவதற்கு விசேட விசாரணை நடத்தப்படும் என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் நேற்று முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை மின்சார விநியோகம் 06

# மக்களை வாழ வைக்க இயலாத தரப்பினரே தற்போது ஆட்சியில்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சாடல்

நாட்டில் இன்று மக்களை வாழ வைக்க முடியாத அரசே காணப்படுகின்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அவிசாவளையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் இதனைக் குறிப்பிட்டார். 06



## யாழ். பல்கலை முகாமைத்துவ பீட மாணவர்களிடையே நேற்று மோதல்

### காயமடைந்த இருவர் வைத்தியசாலையில்





யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீட மாணவர்களிடையே ஏற்பட்ட மோதலில் இரண்டு மாணவர்கள் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

நேற்று ஞாயிற்றுக்கிழமை 05

## போதை மாத்திரைகளுடன் யாழில் ஒருவர் சிக்கினார்



யாழ்ப்பாணம் – கொழும்புத்துறை, வளம்புறத்தில் நீண்ட காலமாக போதை மாத்திரைகள் விற்பனையில் ஈடுபட்டு வந்த ஒருவர் 20 போதை 05




இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராஜாவின் இறுதி நிகழ்வை ஒட்டிய காலத்தில் கட்சியின் பிற தலைவர்களை அச்சுறுத்தும் விதத்தில் பனர் கட்டியும் சமூக ஊடகங்கள் மூலம் மிரட்டல் செய்திகளை விடுத்தும் நடந்து கொண்டவர்கள் தொடர்பில் உண்மைகளைக் கண்டறிவதில் பொலிஸார் கணிசமான தூரம் முன்னேறி இருக்கின்றனர் என்று விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

இந்த விவகாரம் தொடர்பில் இலங்கைத் தமிழரசுக்கு கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் ஏற்கனவே தெல்லிப்பளை பொலிஸில் முறைப்பாடு வழங்கியிருந்தார்.

கட்சியின் பிரமுகர் பீற்றர் இளஞ்செழியன் நேற்று தமது வாக்குமூலத்தை வழங்கினார் என அறியவந்தது.

இவ்விடயத்தில் அச்சுறுத்தலை மேற்கொண்டவர்கள் தொடர்பில் சைபர் கிரைம் பொலிஸார் பல விடயங்களை விரிவாக புலனாய்வு செய்து வருகின்றனர் என ஒரு தகவல் தெரிவித்தது. 06

# இரட்டை நிலைப்பாட்டை அரசாங்கம் பின்பற்றுகிறது

## நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு



அரசாங்கம் இரட்டை நிலைப்பாட்டைப் பின்பற்றுவதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொலனறுவை மாவட்டத்தில் நேற்று நடைபெற்ற "நாமலுடன் கிராமத்துக்குக் கிராமம்" விசேட வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்ச்சியில் கருத்துரைக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இந்த அரசாங்கம் மீது கொண்ட அதீத நம்பிக்கை காரணமாகவே மக்கள் அவர்களுக்கு ஆட்சி அதிகாரத்தை வழங்கினார்கள் என நான் நினைக்கின்றேன்.

பெரும்பாலானவர்கள் மாற்றத்தைக் கோரியே இந்த அரசாங்கத்திற்கு வாக்களித்தனர்.

இருப்பினும் இந்த அரசாங்கம் கூறிய உண்மைக்குப் புறம்பான விடயங்களால் அந்த மக்களுக்கு ஏதோவொரு வகையில் அநீதி இழைக்கப்பட்டுள்ளது.

நடைமுறைப்படுத்த முடியாத வாக்குறுதிகளை வழங்கிய அரசாங்கம் தற்போது வழமையான அரசியல் நடவடிக்கையினை முன்னெடுப்பதற்கு முயற்சிக்கிறது." – என்றார்.

# கடந்த அரசுகளின் கவனக்குறைவான திட்டமே மின்வெட்டுக்குக் காரணம்

## வலுசக்தி அமைச்சர் தெரிவிப்பு



தேசிய மின்சார அமைப்பின் சமநிலையைப் பேணுவதற்கு கடந்த காலங்களில் எந்த திட்டமும் செயல்படுத்தப்படவில்லை என வலுசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி தெரிவித்துள்ளார்.

முன்னைய அரசாங்கங்களின் திட்டமிடல் இல்லாமையும் தொலைநோக்குப் பார்வையற்ற வேலைத்திட்டமும் மின்வெட்டுக்குக் காரணம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய மின்சார அமைப்பின் ஸ்திரத்தன்மையைப் பராமரிப்பதில் கடந்த கால அரசாங்கங்கள் உரிய கவனம் செலுத்தவில்லை என சுட்டிக்காட்டியுள்ளார்.

தொழில்நுட்பத்தைப் பற்றிய புரிதல் இல்லாத தவறான வழிகாட்டுதலும் இந்த நிலைமைக்குக் காரணம் எனத் தெரிவித்தார்.

இந்த நிலைமைக்கான காரணங்கள் முழுமையாக ஆராயப்பட்டு, இது போன்ற நிலைமை மீண்டும் ஏற்படாமல் தடுக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று வலுசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி தெரிவித்துள்ளார்.

# மீண்டும் கதிரை சின்னத்தில் களமிறங்கும் ஸ்ரீ.ல.சு கட்சி



எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி சார்பில் பொதுஜன ஐக்கிய முன்னணியில் கதிரை சின்னத்தில் களமிறங்கவுள்ளதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தி தேர்தலுக்கு முன்னர் கூறியவற்றை இப்போது செயற்படுத்த முடியாது என்பதை நிலைநிறுத்தியுள்ளது எனத் தான் எண்ணுவதாக துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் செய்த போது ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் கூறினார். இது தொடர்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

"கதிரை சின்னம் என்பது 17 வருடங்கள் எதிர்க்கட்சியிலிருந்து சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க 1994 ஆம் ஆண்டு மீண்டும் இந்த நாட்டுக்குப் பல அபிவிருத்தி வேலைத் திட்டங்களை மேற்கொள்வதற்காக அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளப் பயன்படுத்திய சின்னமாகும். அந்த சின்னத்தையே இம்முறை நாங்கள் பயன்படுத்துகின்றோம்.

இலங்கையில் உள்ள அனைத்து பிரதேச சபைகளிலும் இந்த சின்னத்திலேயே எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுகின்றோம்.

அதனாலேயே இன்று நாங்கள் மட்டக்களப்பு மாவட்டத்திற்கும் வருகை தந்தோம். தமிழ், சிங்கள, முஸ்லிம் என்ற பேதமின்றி அனைத்து மக்களும் ஒன்றிணைந்து மீண்டும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி உள்ளிட்ட கூட்டணியிலேயே நாங்கள் போட்டியிடுகின்றோம். மட்டக்களப்பு மாவட்டத்துக்கு வருகைத் தந்தையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

அனைவரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக உற்சாகத்தோடு காத்திருக்கிறார்கள். கடந்த தேர்தலில் நாட்டின் அனைத்து இன மக்களும் மிகப்பெரிய ஏமாற்றத்துக்கு ஆளாகியுள்ளார்கள்." – என்றார்.

# வெள்ளை ஈ தாக்கத்தை உடனடியாக கட்டுப்படுத்த நடவடிக்கை எடுங்கள்!

## வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் பணிப்புரை




தென்னை மரத்தில் மாத்திரமல்லாது ஏனைய விவசாயப் பயிர்களிலும் வெள்ளை ஈ தாக்கம் அவதானிக்கப்பட்டுள்ளது எனவும், அதனை உடனடியாகக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் பணிப்புரை விடுத்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் விவசாயத்துறையினர் மற்றும் மாவட்ட செயலர்களுடன் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கடந்த காலங்களில் வடக்கு மாகாணத்தில் வேகமாகப் பரவிய வெள்ளை ஈ தாக்கம் தற்போது மீண்டும் வரத் தொடங்கியுள்ளது. குளிரான காலநிலை காரணமாக அதன் தாக்கம் குறைவடைந்திருந்த நிலையில் தற்போது மீண்டும் அது பரவத் தொடங்கியுள்ளது என அதிகாரிகள் சுட்டிக்காட்டினார்.

தென்னை மரத்தில் மாத்திரமல்லாது ஏனைய விவசாயப் பயிர்களிலும் அது பரவி வருவதாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

விவசாய ஆராய்ச்சி திணைக்களத்தால் இதனைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்படுவதாக திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் குறிப்பிட்டார்.

தென்னை மரங்களில் பரவும் வெள்ளை ஈ தாக்கத்தை தம்மால் கட்டுப்படுத்துவது சவாலானது எனவும், அதற்கு தென்னை பயிர்ச் செய்கை சபையின் உதவியைப் பெற்றுக் கொள்ளுமாறும் அவர் குறிப்பிட்டார்.

ஏனைய விவசாயப் பயிர்களில் பரவும் வெள்ளை ஈ தாக்கத்தைக் கட்டுப்படுத்த இரசாயன முறையைப் பின்பற்றுவதாகவும் அவர் கூறினார்.

அதற்கான உதவிகளை வடக்கு மாகாண விவசாயத் திணைக்களம் ஊடாக வழங்குவதாக வடக்கு மாகாண பிரதம செயலர் இதன்போது உறுதியளித்தார்.

தென்னை பயிர்ச்செய்கை சபையினரையும், தென்னை பயிர்ச்செய்கை ஆராய்ச்சி அலகினரையும் அழைத்து விரைவில் சந்திப்பு நடத்தி இதனைக் கட்டுப்படுத்துவதற்கான செயற்பாட்டைத் துரிதமாக ஆரம்பிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் ஆளுநர் இதன்போது குறிப்பிட்டார்.

# பேச்சுவார்த்தைகளில் இணக்கப்பாடு இன்றேல் நிச்சயம் அதை நாட்டுக்கு வெளிப்படுத்துவோம்

## தலதா அத்துகோரள தெரிவிப்பு



“ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் இணைவு குறித்த பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுகின்றவர்களின் நிலைப்பாடுகளுக்கமையவே இறுதி தீர்மானத்தை எட்ட முடியும். பேச்சுவார்த்தைகளில் இணக்கப்பாடு இன்றேல் நிச்சயம் அதனை நாட்டுக்கு வெளிப்படுத்துவோம்.”

– இவ்வாறு ஐ.தே.க. பொதுச் செயலாளர் தலதா அத்துகோரள தெரிவித்தார்.

கண்டியில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“பேச்சுவார்த்தைகளில் பங்கேற்கும் தரப்பினரின் நிலைப்பாட்டுக்கமையவே அவற்றின் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்படும். அந்த வகையில் தற்போதும் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அவை தோல்வியடைந்தால் அது குறித்து நிச்சயம் நாட்டுக்கு வெளிப்படுத்துவோம். எவ்வாறிருப்பினும் இன்னும் இறுதி கட்டத்தை நாம் எட்டவில்லை.

இவ்வாரமும் இருதரப்புக்களுக்குமிடையில் சந்திப்பொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இணக்கப்பாடு எட்டப்பட்டால் முன்னோக்கிச் செல்வோம். அவ்வாறில்லை என்றால் மாற்று தீர்மானமொன்றை எடுப்போம். எவ்வாறிருப்பினும் ஐக்கிய தேசிய கட்சியால் தனித்து எந்தவொரு தீர்மானத்துக்கும் வர முடியாது. உள்ளூராட்சிமன்றத் தேர்தல் என்பது மக்களுக்கான தேர்தலாகும்.

எனவே அந்த மக்களுக்காக சிந்தித்து சிறந்த தீர்மானங்களை எடுக்க வேண்டிய பொறுப்பு கட்சி தலைவர்களுக்குரியது. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்களுக்காகவே சிந்தித்து தீர்மானங்களை எடுக்கின்றார். அதே போன்று ஏனைய தலைவர்களும் செயற்பட வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும்.

மே 9 கலவரத்தில் அரசியல்வாதிகளின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. அவ்வாறு சொத்து சேதத்தை ஏற்படுத்தியவர்களிடமே அதற்கான இழப்பீட்டையும் பெற்றுக் கொள்ள வேண்டும். காலி முகத்திடல் ஆர்ப்பாட்டத்தின் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதால் நாடாளுமன்றத்தை சுற்றி வளைக்கத் திட்டமிட்டவர்கள் யார் என்பது அனைவருக்கும் தெரியும்.

நாட்டில் தற்போதுள்ள பிரதான பிரச்சினைகளை மறைப்பதற்காகவே அரசாங்கம் இவ்வாறான விடயங்களை நோக்கி மக்களை திசை திருப்பிக் கொண்டிருக்கிறது. உண்மையில் இவை அரசாங்கத்தின் இயலாமையை மறைப்பதற்காக மேற்கொள்ளப்படுகின்ற விடயங்கள் ஆகும்.” – என்றார்.

# மின்தடை குறித்து அறிக்கை கோரும் பொது பயன்பாடுகள் ஆணைக்குழு



நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட மின் தடை தொடர்பில் அறிக்கை கோருவதற்கு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த அறிக்கையின் அடிப்படையில் அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே, தேசிய மின்கட்டமைப்பு வழமைக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக வலுசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.



# நேற்றைய திடீர் மின்தடையின்போது தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தக் கோரல்

## பொதுமக்களிடம் விடுத்திருந்த நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை

நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட திடீர் மின்தடை காரணமாக நீரை சிக்கனமாக பயன்படுத்துமாறு நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை பொதுமக்களை கேட்டுக்கொண்டது.

அத்துடன், தடைப்பட்டுள்ள மின் விநியோகம் வழமைக்கு கொண்டுவரப்படும் வரை வீடுகளில் பொருத்தப்பட்டுள்ள சூரியப்படலங்களை நேற்று மாலை 4 மணி வரை தேசிய மின்கட்டமைப்பிலிருந்து துண்டிக்குமாறும் மின்சக்தி அமைச்சர் கோரிக்கை விடுத்திருந்தார்.

இதனிடையே, மின்தடை காரணமாக ரயில் கடவைகளில் சமிக்ஞை கட்டமைப்பு செயற்படுவதில் சிக்கல் ஏற்படுமென்பதால் அவதானத்துடன் செயற்படுமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது என ரயில்வே பொதுமுகாமையாளர் அறிவித்திருந்தார்.

நாடளாவிய ரீதியில் நேற்றுக் காலை திடீர் மின்விநியோகத்தடை ஏற்பட்டது.

மின்கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள சமச்சீரற்ற தன்மையே மின்தடைக்கு காரணமென எரிசக்தி அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

# ரணில் பதவியை தக்கவைக்க 122 கோடி ரூபா வழங்கினார்

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ கூறுகிறார்



"43 நாடாளுமன்ற உறுப்பினர்கள் 5 இலட்சம் முதல் 980 இலட்சம் வரை நட்டயீட்டை பெற்றுக்கொண்டுள்ளனர். ரணில் விக்கிமரசிங்க தனது பதவியை தக்க வைத்துக் கொள்வதற்காக தன்னுடன் இருந்தவர்களுக்கு அரச திறைசேரியிலிருந்து பெற்றுக்கொடுத்த இலஞ்சமாகவே இதனை பார்க்க வேண்டியுள்ளது."

– இவ்வாறு சுகாதார மற்றும் வெகுசன ஊடகத்துறை நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

பேராதனையில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நட்டயீடு வழங்கப்பட்ட காலப்பகுதியில் அந்த பகுதிக்குரிய பிரதேச செயலாளர்கள் மதீப்பிட்டாளர்கள் நாடாளுமன்றத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

அப்போதைய ஆளுங்கட்சியின் பிரதம கொரடாவாக இருந்த பிரசன்ன ரணதுங்கவினால் கடிதம் அனுப்பட்டு நாடாளுமன்றத்துக்கு அவர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

அங்கு சென்றிருந்த அதிகாரிகள் அப்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்திருந்ததுடன் அவர்களுக்கு அந்த காலப்பகுதியில் அதிகமாக மதிப்பீடு செய்யுமாறு அழுத்தம் பிரயோகிக்கப்பட்டுள்ளது.

எமது நாட்டில் பேரிடர் ஒன்று ஏற்படுமனால் ஒரு நபருக்கு அதிகபட்சமாக 25 லட்சம் ரூபாவையே வழங்க முடியும். உண்மையில் அந்த தொகை கிடைப்பதில் சிரமம் உள்ளது.

ஆனால் அந்த காலப்பகுதியில் முறையாக நட்டயீட்டை பெற்றுக்கொள்வதில் முறைமை ஒன்று இருக்கவில்லை. ஆனால் ரணில் விக்கிரமசிங்க சட்டத்திட்டங்களை மாற்றி தேவையான வகையில் நட்டயீட்டை பெற்றுக்கொள்வதற்கான முறைமை உருவாக்கியுள்ளார்.

இங்கு சில பிரச்சினைகள் உள்ளன. 43 பாராளுமன்ற உறுப்பினர்கள் 5 இலட்சம் முதல் 980 லட்சம் வரை நட்டயீட்டை பெற்றுக்கொண்டுள்ளனர்.

இவர்கள் நட்டயீட்டை மாத்திரம் அல்ல. சில நிறுவனங்களிடமிருந்து காப்புறுதிகளையும் பெற்றுக்கொண்டுள்ளனர். நாம் வெளியிட்ட பெயர் பட்டியிலிருந்து யார் காப்புறுதிகளை பெற்றுக்கொண்டுள்ளனர் என்பதை காப்புறுதி நிறுவனங்கள் நாட்டு மக்களுக்கு அறிவிக்க வேண்டும்.

அடுத்ததாக அவர்களது அசையும் அசையாத சொத்துக்கள் 800 900 இலட்சமாக இருந்தால் அவர்களது சொத்துக்கள் தொடர்பிலான அறிக்கைகளை நாடாளுமன்றத்துக்கு சமர்பிக்க வேண்டும்.

அதிக நட்டயீட்டை பெற்றுக்கொள்வதற்காக சிலர் தமது வீட்டில் நகைகள் இரத்தினகற்கள் இருந்தாக தெரிவித்துள்ளனர். நட்டயீட்டைப் பெற்றுக்கொண்டவர்களின் பிரதேசங்களில் உள்ள மக்கள் எம்மை அழைத்து அவ்வாறான சேதங்கள் எதுவும் இடம்பெறவில்லை எனக்கூறுகிறார்கள்.

இரண்டு ஜன்னல்கள் மாத்திரமே சேதமடைந்திருந்தாக கூறுகின்றனர். ஆனால் இவர்கள் எவ்வாறு இந்தளவு நிதியை பெற்றுக்கொண்டனர்? அவர்கள் தமது கட்சியின் ஆதரவாளர்களை பெரவாவியில் முழ்கடிக்கச்செய்து விட்டு தாம் நட்டயீட்டு சமுத்திரத்தில் நன்றாக நீந்தி நீந்தி குளித்துள்ளனர். இதுவே தற்போது புலப்படுகிறது.

எனவே இது தொடர்பில் நாம் விசாரணைகளை முன்னெடுப்போம். இந்த நட்டயீடு மதிப்பீடு செய்யப்பட்ட விதம் தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

தமக்கு வழங்கப்பட்ட நட்டயீடு போதாது என ஒருவர் கூறுவதை பார்த்தேன். இவர்கள் எவ்வாறு இவ்வளவு சொத்துக்களை கொண்டிருந்தார்கள் என்பது தொடர்பில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு விசாரணைகளை முன்னெடுக்கும்.

ரணில் விக்கிரமசிங்க தனக்கு ஜனாதிபதி பெற்றுக்கொடுத்தமைக்காவும் ஜனாதிபதி தேர்தலில் வெற்றிப்பெற்ற வேண்டும் என்பதற்காகவும் தன்னுடன் இருந்தவர்களுக்காக திறைசேரியிலிருந்து பெற்றுக்கொடுத்த இலஞ்சமாகவே இதனை பார்க்க வேண்டியுள்ளது." என்றார்.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பயிர்ச்சேதங்களுக்கு 187 மில்லியன் ரூபா இழப்பீடு வழங்கிவைப்பு



கடந்த வருடம் நவம்பர் மாதம் வெள்ளப்பெருக்கு காரணமாகப் பெரும்போகத்தில் ஏற்பட்ட பயிர்ச் சேதங்களுக்கு 184 மில்லியன் ரூபாய் இழப்பீடு வழங்கியுள்ளதாக கமநல மற்றும் விவசாயிகள் காப்புறுதி சபை தெரிவித்துள்ளது.

பொலன்னறுவை மாவட்டத்தில் பயிர் இழப்பீடு வழங்கும் பணி நிறைவடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

மீதமுள்ள மாவட்டங்களுக்கான பயிர் இழப்பீடு வழங்கும் பணிகள் இந்த மாத இறுதிக்குள் நிறைவு செய்யவுள்ளதாக அந்த சபையின் தலைவர் பேமசிறி ஜாசிங்க ஆரச்சி தெரிவித்துள்ளார்.

பொலன்னறுவை மாவட்டத்தில் 6,239 விவசாயிகளுக்கு 114 மில்லியன் ரூபாய் பயிர் இழப்பீடும், முல்லைத்தீவு, வவுனியா மற்றும் திருகோணமலை பகுதிகளில் 3,272 விவசாயிகளுக்கு 70 மில்லியன் ரூபாய் இழப்பீடும் வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

### போதை மாத்திரைகளுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாத்திரைகளுடன் நேற்று ஞாயிற்றுக்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்குக் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### யாழ்.பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

புதுமுக மாணவர்களின் வரவேற்பு நிகழ்வு நடைபெற்றது. இதன்போது 3ஆம் மற்றும் 4ஆம் ஆண்டு மாணவர்களிடையே முறுகல் நிலை ஏற்பட்டு பின்னர் கைகலப்பு ஏற்பட்டது.

இதன்போது ஏற்பட்ட மோதலில் இரண்டு மாணவர்கள் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சுவிஸிலிருந்தும் லண்டனிலிருந்தும் விடயங்களை சமூக ஊடகங்களில் பதிவேற்றியோர் குறித்து பொலிஸாருக்குத் தெரிய வந்திருப்பதாகவும் கூறப்பட்டது.

சம்பந்தப்பட்டோர் இலங்கை பொலிஸாரிடம் பிடிபடுவார்களோ, இல்லையோ அவர்களின் விவரங்கள் இலங்கை பொலிஸார் மூலம் அம்பலமாகும் சூழல் உருவாகி இருப்பதாகக் கூறப்படுகிறது.

இதற்கிடையில் மாவை சேனாதிராஜா உயிரிழந்த காலத்திலும், அவரது இறுதி நிகழ்வு சமயத்திலும் துருக்கியில் ஒரு சர்வதேச மாநாட்டில் கலந்து கொண்டிருந்த தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் நாடு திரும்பிய பின்னர் நேற்று முன்தினம் மாலை தெல்லிப்பளையில் மாவை சேனாதிராஜாவின் வீட்டுக்குச் சென்று அவரது மகனையும் உறவினர்களையும் சந்தித்து ஆறுதல் தெரிவித்தார்.

அவர் அங்கு சற்று நேரம் தங்கியிருந்து பேசிவிட்டு புறப்பட்ட சமயம் அங்கிருந்த மாவை சேனாதிராஜாவின் சகோதரர் ஒருவர் சாணக்கியனுடன் வாய்த் தர்க்கப்பட முயன்றார் என்றும் –

அச்சமயம் இடையில் புகுந்த மாவை சேனாதிராஜாவின் மூத்த புதல்வர் "சித்தப்பா இந்த விடயங்கள் எல்லாம் இங்கு வேண்டாம்!" – என்று கடுமையான தொனியில் கூறி விடயத்துக்கு அந்த மட்டில் முற்றுப்புள்ளி வைத்தார் என்றும் தெரிய வந்தது.

\+ + +

'நேற்று உள்ளவனாக இருந்த ஒருவன், இன்று இல்லை' என்னும் நிலையாமையாகிய பெருமையை உடையதுதான் இந்த உலகம் ஆகும் என்கின்றான் வள்ளுவப் பெருந்தகை.

அத்தகைய சோக அனுபவம் ஒன்றை நேற்றுப் பெற்றுக் கொண்டேன்.

மூத்த தமிழ்ப் பத்திரிகையாளரும் 'ஞாயிறு தினக்குரல்' முன்னாள் ஆசிரியருமான பாரதி இராஜநாயகம் அவர்கள் காலமான செய்தி அத்தகைய அனுபவத்தைத்தான் எனக்கு தந்தது.

'தமிழன்' பத்திரிகை ஆசிரியர் சிவராஜா, மூத்த தமிழ் ஊடகவியலாளர் தில்லைநாதன் போன்றோர் சகிதம் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் நண்பன் பாரதியை அவரது இல்லத்தில் நேரில் சென்று பார்த்து சுகம் விசாரித்தேன்.

நோய்வாய்ப்பட்டிருந்தார். ஆயினும் தெளிவாகவும் சுருக்கமாகவும் எங்களோடு உரையாடினார்.

மீண்டும் வந்து பார்க்கிறேன் என்று கூறிப் பிரிந்தேன். ஆனால் அதுதான் கடைசி சந்திப்பாகிவிட்டது. முதல் நாள் அவரை நாங்கள் சந்தித்த அதே நேரம் அடுத்த நாள் நம்மை விட்டுப் பிரிந்திருக்கின்றார் அவர்.

சுமார் 41 வருடங்களுக்கு முன்னர் 1984 இல் யாழ்ப்பாணத்தில் 'ஈழமுரசு' அதுவரை வார வெளியீடாக வந்து, பின்னர் தினசரியாக வெளியாகத் தொடங்கியது. அது வரை வார வெளியீட்டிற்கு சொக்கலிங்கம் (சொக்கன்) ஆசிரியராக இருந்தார்

தினசரி வெளியீட்டின் முதல் நாள், பத்திரிகை பணியில் யாழ்ப்பாணம் பஸ்டியன் சந்தித்து அருகில் இருந்த அதன் ஆரம்ப கால அலுவலகத்தில் நானும் நாளிதழின் ஆசிரியர் எஸ்.திருச்செல்வமும் (பின்னாளில் முரசொலி ஆசிரியர்) பணியில் இருந்தோம்.

எஸ்.திருச்செல்வம் அந்த நாளிதழின் ஆசிரியராக இருந்தார். நான் இரவு செய்திகளுக்குப் பொறுப்பான செய்தி ஆசிரியராக முதல் நாள் பணியில் இருந்தேன். அன்றைய ஒரு நாள் பணியோடு அந்தப் பத்திரிகையில் எனது சேவை முடிந்துவிட்டது.

நான் அதுவரை சில மாதங்கள் உதவியாளனாக பணியாற்றிய நிதி நிறுவனம் புதிதாக ஒரு நாளிதழை வெளியிடுவோம் என்று உறுதி அளித்ததன் பேரில் (அதுவே பின்னாளில் 'உதயன்' நாளிதழாக வெளியானது) நான் ஈழமுரசில் எனது பணியை ஆசிரியர் திருச்செல்வத்தின் இணக்கத்துடன் நிறுத்திக் கொண்டேன்.

ஈழமுரசு பத்திரிகை தினசரி நாளிதழாக வெளிவந்த போது அதன் முதல் நாள் தலைப்புச் செய்தி தமிழர் விடுதலைக் கூட்டணியின் அப்போதைய பிரமுகர் சிரேஷ்ட சட்டத்தரணி எம் எம். சிவசிதம்பரத்திடம் நான் தொலைபேசி மூலம் பெற்றுக்கொண்ட விடயம் என்ற நினைவு எனக்கு உள்ளது.

அந்த முதல் நாள் பணி சமயம் எங்கள் இருவரோடு (ஆசிரியர் திருச்செல்வம் மற்றும் நான்) பணியாற்ற வந்த நண்பர் தான் பாரதி அவர்கள்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் என்னை விட இரண்டு, மூன்று வருடங்கள் பின்னர் கல்வி கற்ற பாரதி அன்றுதான் 18 அல்லது 19 வயது இளைஞனாக முதன் முதலாக பத்திரிகை துறைக்குக் காலடி எடுத்து வைத்தார்.

தமது பத்திரிகை துறை சேவையின் முதல் நாளை, அத்துறையில் அவரை விட சுமார் ஐந்து ஆண்டு காலம் சிரேஷ்ட நிலையில் இருந்த என்னோடு சேர்ந்துதான் அவர் ஆரம்பித்தார்.

அன்று முதல் கடந்த 42 ஆண்டுகளாக சக ஊடகவியலாளனாக எங்கள் நட்பும் அன்புறவும் நீண்ட புரிந்துணர்வு மிக்க நல்லிணக்கமான பல ஆழமான நினைவுகளைக் கொண்டது.

அற்புதமான மனிதநேயம் கொண்ட ஒரு நண்பனை இத்துறையில் நாம் இழந்து நிற்கிறோம்.

---

## தமிழ் ஊடகத்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஊடகவியலாளர் இராஜநாயகம் பாரதியின் நினைவு கனத்துக் கிடக்கின்றது என்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம் தெரிவித்துள்ளார்.

ஈழத்தின் மூத்த ஊடக ஆளுமை இராஜநாயகம் பாரதியின் திடீர் மறைவையொட்டி அவர் நேற்று இரவு வெளியிட்டுள்ள இரங்கல் செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"பாரதி அண்ணா..! அமைதியான பேச்சும் அதிராத சுபாவமும் உங்கள் அடையாளம்..!

ஆழமான பார்வைகளால் அனைத்தையும் அறிந்துவைத்திருந்தவர் நீங்கள்... தமிழ் ஊடகத்துறையில் நிரப்ப முடியாத வெற்றிடமாக உங்கள் நினைவு கனத்துக் கிடக்கின்றது...

என்றும் நலம் நாடும் உங்கள் குரலை இழந்துவிட்டோம் அண்ணா...!"– என்றுள்ளது.

---

## மின் தடைக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தடைப்பட்டது.

பாணந்துறை உப மின் நிலையத்தில் ஏற்பட்ட சமநிலையற்ற தன்மை காரணமாக நாடு முழுவதும் திடீர் மின்சார விநியோகத்தடை ஏற்பட்டது என்று மின்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

பாணந்துறையில் உள்ள உப மின் நிலையத்தின் மின் கட்டமைப்புடன் குரங்கு ஒன்று மோதியதன் காரணமாக இவ்வாறானதொரு நிலை ஏற்பட்டது என்று மின்சக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி தெரிவித்துள்ளார்.

இதனிடையே, நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட மின்சார விநியோகத் தடை காரணமாக பல்வேறு சேவைகள் பாதிக்கப்பட்டிருந்தன.

---

## மக்களை வாழ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மலிவு விலையில் தேங்காய் அரிசி மற்றும் உப்பு வாங்க முடியாத நிலை நாட்டில் ஏற்பட்டுள்ளது. அத்தியாவசிய உணவுப் பொருட்களை வழங்க முடியாத அரசு எவ்வாறு மக்களை வாழ வைக்கப்போகின்றது என்ற விடயத்தில் பிரச்சினை காணப்படுகின்றது.

தற்போது ஆட்சியில் இருப்பவர்கள் எதிர்க்கட்சியில் இருந்தபோது நெல்லுக்கு 50 ரூபா உத்தரவாத விலையைத் தருவதாகக் கூறினர். ஆனால் இன்று அவர்கள் வயல்வெளிகளுக்குச் சென்று விவசாயிகளைச் சந்திப்பதற்கே பயப்படுகின்றனர்.

இவ்வாறான பொய்களை சொல்லி மக்களை ஏமாற்றும் செயல்களில் ஈடுபட்டு, ஆட்சிக்கு வந்த பின்னர் விவசாயிகளை அவர்கள் கைவிட்டுள்ளனர்.

இன்று அரச உத்தியோகத்தர்கள் விருப்பத்தின் பேரில் இடமாற்றம் செய்யப்பட்டு அவர்களுக்கு ஆதரவானவர்கள் மாத்திரம் பாதுகாக்கப்பட்டு வருகின்றனர்.

பெரும்பான்மையான மக்கள் இன்று கடன் சுமைக்கு ஆளாகியுள்ளனர். நலமாக வாழ்ந்த மக்களின் வாழ்வாதாரம் வீழ்ச்சி கண்டுள்ளது. உற்பத்தி, நுகர்வு, முதலீடு என்பன குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றன. தங்கத்தை அடகு வைத்து விவசாயிகள் விவசாய நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்தாலும் உரங்களுக்கு நிலையான விலை வழங்கப்படவில்லை. இதனால் அவர்கள் கடன் சுழற்சியில் மீண்டும் சிக்கியுள்ளனர்.

கூட்டுறவுச் சங்கங்களில் இருந்து கடன் வாங்குவது அதிகரித்துக் காணப்படுகின்றது. இவர்களின் வருமான மூலங்கள் சுருங்கிப் போயுள்ளன.

அண்மையில் நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முனைவோர் ஜனாதிபதிசெயலகத்துக்குச்சென்ற போதும் அவர்களுக்கு உரிய தீர்வுகள் எதுவும் வழங்கப்படவில்லை. சேவை செய்ய வேண்டும் என்றே மக்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தை இந்த ஆட்சியாளர்களுக்குப் பெற்றுத் தந்தனர். பழைய பாணியிலேயே இவர்களும் ஆட்சி நடத்தி வருகின்றனர்.

மக்கள் ஆணைக்கு இந்த அரசு நியாயத்தை நிலைநாட்ட வேண்டும். காலம் தாழ்த்தல், இழுத்தடிப்பு தீர்வாகாது. மக்கள் உங்களிடம் இருந்து இவற்றை எதிர்பார்க்கவில்லை. பிரச்சினைகள் எழும் போது சமாளிப்புக்குப் பல விடங்களை முன்வைத்து வருகிறீர்கள். ஆனால், எடுத்த நடவடிக்கைகள் ஒன்றும் இல்லை. அதிகாரம் உங்கள் கைவசமே காணப்படுகின்றது.

எனது எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் துன்பப்படும் மக்களுக்காகத் எப்போதும் திறந்தே இருக்கின்றது. எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் மக்கள் மன்ற அலுவலகமாக மாற்றப்பட்டு தீர்வுகளை வழங்கும் வேலைத்திட்டத்தை விரைவில் ஆரம்பிப்போம்." – என்றார்.



# யாழ் நகரில் இளைஞர் ஒருவரைக் கடத்தி ரூ.80 லட்சத்தை ஏப்பமிட்ட குழு சிக்கியது

யாழ் நகரில் இளைஞர் ஒருவரைக் கடத்திச் சென்று 80 லட்சம் ரூபா பணத்தை அபகரித்த கும்பலைச் சேர்ந்தவர்கள் என்று கருதப்படும் பெண் ஒருவர் உட்பட நான்கு பேர் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் குற்றத் தடுப்பு விசாரணைப் பிரிவு பொலிஸாரால் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

வெளிநாடு செல்வதற்காக ஆசைப்பட்ட இளைஞரொருவரிடம் 80 லட்சம் ரூபா வரையான பணத்தை வங்கியில் வைப்பிலிட்டு வங்கி அறிக்கையை நேரடியாக வந்து தமக்குக் காட்டுமாறு வெளிநாட்டு முகவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதனை நம்பி சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் ஆரியகுளம் பகுதிக்குச் சென்ற இளைஞனைக் காரில் கடத்திச் சென்ற இந்தக் குழு இளைஞரின் வங்கிக் கணக்கில் இருந்த 80 லட்சம் ரூபா வரையான பணத்தை மற்றுமொருவரின் வங்கி கணக்கிற்கு மாற்றச் செய்து விட்டு இளைஞரை கோப்பாய் பகுதியில் இறக்கிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட இளைஞர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டைப் பதிவு செய்தார்.

சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்ட பொலிஸார் பணம் மாற்றப்பட்ட வங்கி கணக்கிற்கு உரித்தான பெண்ணொருவரைக் கைது செய்தமையுடன் கடத்தலில் ஈடுபட்ட மேலும் மூவரையும் கைது செய்தனர்.

இந்நிலையில் அந்தப் பெண்ணின் வங்கி கணக்கில் இருந்து பணம் வேறொரு வங்கி கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ள நிலையில் பணத்தை மீட்பது தொடர்பாக பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட கார் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. கைதான நான்கு சந்தேகநபர்களையும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# நுரைச்சோலை மின் உற்பத்தி நிலைய மூன்று இயந்திரங்களும் செயலிழப்பு!

நுரைச்சோலை லக்விஜய நிலக்கரி மின்னுற்பத்தி நிலையத்தின் 3 மின்னுற்பத்தி இயந்திரங்களும் செயலிழந்துள்ளன.

திடீர் மின்விநியோகத் தடை காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

நீர்மின்னுற்பத்தியின் ஊடாக தொடர்ச்சியாக மின் விநியோகத்தை முன்னெடுக்க முடியும் என எதிர்பார்ப்பதாக வலுசக்தி அமைச்சர், பொறியியலாளர் குமார ஜயகொடி தெரிவித்துள்ளார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நீதித் துறையில் தலையீடு

'நீதி நிலைநாட்டப்படுவது மாத்திரமல்லாமல் அது நிலைநாட்டப்படுவது போல காட்டப்படவும் வேண்டும்.' - இது சட்ட, நீதித்துறையில் ஒரு முக்கிய வாசகம் ஆகும். நீதித்துறை செவ்வனே செயப்படுகின்றது என்ற நம்பிக்கையைத் தருவதற்கு இது முக்கியமானது.

அண்மையில் ஒரு குற்றவியல் வழக்குத் தொடர்பான சட்டமா அதிபரின் தீர்மானம் குறித்து விளக்கம் கேட்பதற்காகவோ அல்லது அது பற்றி உரையாடுவதற்காகவோ சட்டமா அதிபரை ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தம்மிடம் அழைத்தார் என்ற செய்தி சட்டத்துறையில் பெரும் விசனங்களை ஏற்படுத்தியிருக்கின்றது.

அப்படி ஒரு விடயத்துக்காக ஜனாதிபதி சட்டமா அதிபரை அழைத்திருந்தால் அல்லது அழைத்து விளக்கம், வியாக்கியானம் கோரியிருந்தால் அது சட்ட - நீதித்துறை விடயத்தில் அரசியல் தலைமையின் மோசமான தலையீடு என்று சட்ட வட்டாரங்கள் கண்டனத் தொனியில் கருத்துத் தெரிவித்திருக்கின்றன.

இது தொடர்பில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கமும் காட்டமான அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கின்றது.

'சண்டே லீடர்'பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் லஸந்த விக்ரமதுங்க படுகொலை செய்யப்பட்டு 16 ஆண்டுகள் கடந்துவிட்டன. இன்னமும் கொலையாளிகள் கண்டுபிடிக்கப்படவில்லை. நீதி நிலை நிறுத்தப்படவில்லை. பொறுப்பு கூறல் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இந்தப் பின்புலத்தில் லஸந்த விக்ரமதுங்கவின் சாரதி கடத்தப்பட்ட விடயம் தொடர்பாக நீண்ட காலம் நிலுவையில் இருக்கும் ஒரு வழக்கில் எதிரிகளை விடுவிப்பதற்கான பரிந்துரையை சட்டமா அதிபர் வழங்கியிருந்தார் எனக் கூறப்படுகின்றது.

அது பற்றிய தகவல் வெளியாகி, சில அரசியல் அதிர்வுகளை ஏற்படுத்திய சூழ்நிலையில், சட்டமா அதிபரை விளக்கம் கேட்பதற்காக ஜனாதிபதி அழைத்துள்ளார் என்று வெளியான செய்திகள் சட்டத்துறையில் கடும் சீற்றத்தையும் ஆட்சேபனையையும் கிளப்பி இருக்கின்றன.

சட்டமா அதிபரின் தீர்மானத்தை அரசாங்கம் மறு பரிசீலனை செய்யும் என்று அமைச்சரவை பேச்சாளரும் ஊடக அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ கூறியமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கின்றது.

சட்டமாஅதிபர்ஓர்அரசபொதுப் பணியாளராக இருக்கும் அதே வேளையில், குற்றவியல் விவகாரங்களில் அவர் ஓர் அரை நீதித் துறைப் பாத்திரத்தை ஆற்றுகிறார் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். அதற்கான தனித்துவ - தற்றுணிபு - அதிகாரம் அவருக்கு உண்டு. அந்த அதிகாரத்தை பிரயோகிப்பதில் அவர் தனித்துவமான உரிமை மிக்கவர் என்பதும், அது தொடர்பில் நீதிமன்றத் தலையீடுகள் கூட வரையறை செய்யப்படனவாக இருக்கின்ற நிலையில் அரசியல் தலைமைகள் அல்லது அமைச்சரவை அதில் தலையிடவோ அது பற்றி விசாரிக்கவோ முடியாது என்பது சுட்டிக்காட்டப்படுகின்றது.

குற்றவியல் விவகாரங்களில் சட்டமா அதிபரின் தீர்மானங்களை ரிட் மனு மூலமோ அல்லது அடிப்படை உரிமை மீறல் மனு மூலமோ தான் நீதித்துறையே தலையிட முடியும் என்று சட்ட வரையறை இருக்கையில் அதில் அரசும், அரசுத் தலைவரும், அமைச்சரவையும் தலையிடுவது என்பது முறையற்றது. இது நீதித் துறையில் கண்டனத்துக்குரிய அப்பட்டமான தலையீடு ஆகும்.

# மக்கள் நம் பக்கம் இருக்கிறார்கள் தொண்டர்களுக்கு ஸ்டாலின் கடிதம்

"மாவட்டந்தோறும் ஆய்வுப் பணிகளின் அடுத்தகட்டமாக பெப்ரவரி 21, 22 ஆகிய நாள்களில் கடலூர் மாவட்டத்திற்குப் பயணிக்க இருக்கிறேன். எங்கு சென்றாலும் மக்களின் மலர்ந்த முகம் கண்டு மகிழ்கிறேன்" – இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர், தொண்டர்களுக்கு எழுதிய கடிதத்தில் மேலும் குறிப்பிடுகையில்,

"பெரியார் மண்ணான தமிழ்நாட்டில், அவர் பிறந்த ஈரோட்டின் கிழக்குத் தொகுதியில் நடைபெற்ற இடைத்தேர்தலில், அண்ணாவால் உருவாக்கப்பட்டு, கருணாநிதியால் பேணி பாதுகாக்கப்பட்டு, அவர்தம் தொண்டர்களால் வளர்க்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளராகப் போட்டியிட்ட வி.சி.சந்திரகுமார் உதயசூரியன் சின்னத்திலே வாக்களித்து மகத்தான வெற்றியை மக்கள் வழங்கியிருக்கிறார்கள். இது திராவிட மாடல் ஆட்சிக்கு மக்கள் அளித்திருக்கும் மற்றொரு நற்சான்றிதழ்.

நம் உயிர்நிகர் தலைவர் கருணாநிதியை இயற்கை நம்மிடம் இருந்து பறித்துக்கொண்டதால், அவருடைய அன்பு உடன்பிறப்புகளான நீங்கள், கழகத் தலைவர் என்ற பொறுப்பை என் தோளில் சுமத்தினீர்கள்.

கழகத்தைத் தோளிலும், தலைவர் கருணாநிதியையும் – அவருடைய உடன்பிறப்புகளான உங்களையும் நெஞ்சிலும் சுமந்துகொண்டு தொடர்ந்து பயணிக்கிறேன். இந்தப் பயணத்தில் எதிர்கொண்ட தேர்தல் களங்களில் எல்லாம் வெற்றியன்றி வேறில்லை என்கிற வகையில் தொடர்ச்சியான வெற்றியை திராவிட முன்னேற்றக் கழகம் பெற்று வருகிறது. அந்த வரிசையில், ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலிலும் கழக வேட்பாளர் வெற்றி பெறுவார் என்பதில் உங்களைப் போலவே உங்களில் ஒருவனான நானும் உறுதியாக இருந்தேன்.

இடைத்தேர்தல் பணிகளைக் கழக



நிர்வாகிகளும், உடன்பிறப்புகளும், தோழமைக் கட்சிப் பிரமுகர்களும் கவனித்துக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையுடன் திராவிட மாடல் அரசின் மக்கள் நலன் சார்ந்த திட்டங்களையும், அவை உரிய முறையில் செயல்படுத்தப்பட வேண்டும் என்பதற்கான ஆய்வுப் பணிகளையும் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறேன். பெப்ரவரி 6, 7 திகதிகளில் அரசுத் திட்டங்களின் ஆய்வுப் பணிகளுக்காகவும், கழக நிர்வாகிகள் – உடன்பிறப்புகளின் செயல்பாடுகளை அறிந்துகொள்ளவும் நெல்லை மாவட்டத்திற்கு நான் மேற்கொண்ட பயணம் எல்லையில்லா மகிழ்ச்சியை எனக்கு அளித்தது.

ஒவ்வொரு மாவட்டமாக நடைபெறும் ஆய்வுப் பணிகள் மற்றும் கழக நிர்வாகிகளுடனான சந்திப்புக்காக அந்தந்த மாவட்டங்களுக்குச் செல்லும்போது ஒன்றையொன்று விஞ்சி நிற்கும் வகையிலே மக்களின் பேரன்பும், தாய்மார்களின் பாசமும், உடன்பிறப்புகளின் கொள்கை உணர்வும் பொங்கிப் பெருகுவதைக் காண்கிறேன். அதில் நெல்லைப் பயணம் மிகுந்த உற்சாகத்தை எனக்கு அளித்துள்ளது.

மக்கள் மீது எனக்கு நம்பிக்கை இருந்தது. அதைவிட மக்களுக்கு என் மீது அதிக நம்பிக்கை உள்ளது. அதனால்தான் நேரடி பிரச்சாரத்துக்கு வர இயலாதபோதும், என் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு உதயசூரியன் சின்னத்திற்குப் பெருவாரியான வாக்குகளை அளித்து, தி.மு.கழக வேட்பாளரை 90 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்து, எதிர்த்து நின்ற மற்ற அனைவரையும் டெபாசிட் இழக்கச் செய்திருக்கிறார்கள்.

2026 சட்டமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழக அணி 200 தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெற வேண்டும் என்ற இலக்குடன், 'வெல்வோம் இருநூறு – படைப்போம் வரலாறு' என்ற முழக்கத்தை நான் முன்வைத்தேன். 'இருநூறு இலக்கு' என்பதற்கான தொடக்க வெற்றியாக அமைந்திருக்கிறது இடைத்தேர்தல் கண்ட ஈரோடு கிழக்கு. மக்கள் நம் பக்கம் இருக்கிறார்கள். நம்பிக்கையை வெளிப்படுத்துகிறார்கள். அந்த மக்களுக்குரிய திட்டங்களை நிறைவேற்றுவதற்குத் திராவிட மாதிரி அரசு, ஒன்றியத்தை ஆளும் பா.ஜ.க. அரசுடன் அன்றாடம் போராடிக் கொண்டிருக்கிறது.

வஞ்சிப்பது பா.ஜ.க. அரசின் பழக்கம். அதனையும் எதிர்கொண்டு, தமிழ் நாட்டை வாழவைப்பது தி.மு.கழகத்தின் வழக்கம் என்பதை ஆவடி பொதுக் கூட்டத்தில் நான் உரையாற்றியபடி, தமிழ் நாட்டின் வளர்ச்சிக்கான நம்முடைய பணிகள் தொடரும்.

மாநில உரிமைக்கான துணிச்சலான குரல் தொடர்ந்து ஒலிக்கும். சட்டத்தின் வழியே ஜனநாயகத்தை நிலைநாட்டுவதில் தி.மு.கழகம் முன்னணியில் இருக்கும். அதற்கான நம்பிக்கையை ஈரோடு கிழக்குத் தொகுதியின் வெற்றி நமக்கு அளித்திருக்கிறது.

இந்த வெற்றிப்பயணம் 2026 சட்டமன்றத் தேர்தலிலும் தொடர்ந்திடும் வகையில் தி.மு.கழக அரசின் செயல்பாடுகள் அமைந்திடும். அவை சரியாக நிறைவேறுவதை உறுதி செய்யும் வகையில், மாவட்டந்தோறும் மேற்கொள்ளப்படும் ஆய்வுப் பணிகளின் அடுத்தகட்டமாக பெப்ரவரி 21, 22 ஆகிய நாள்களில் கடலூர் மாவட்டத்திற்குப் பயணிக்க இருக்கிறேன். எங்கு சென்றாலும் மக்களின் மலர்ந்த முகம் கண்டு மகிழ்கிறேன். கடலூரில் கடலெனத் திரண்டு வரவேற்கக் காத்திருக்கும் பொதுமக்கள், உடன்பிறப்புகளின் மலர்ந்த முகங்களை இப்போதே என் மனக்கண்களில் காண்கிறேன்." என்று குறிப்பிட்டுள்ளார்.

# நாட்டிற்கு எதிராக கருத்துகளை தெரிவித்த காங்கிரஸ் கட்சி துடைத்தெறியப்பட்டுள்ளது

## எச். ராஜா தெரிவிப்பு

"டில்லி சட்டசபை தேர்தலில் வெற்றி பெற்று பாரதிய ஜனதாக் கட்சி ஆட்சியை பிடித்துள்ள நிலையில், பா.ஜ.கவின் வெற்றிக்கு பிரதான காரணம் பிரதமர் மோடியின் நலத்திட்டங்களே என பா.ஜ.க தேசியக்குழு உறுப்பினர் எச். ராஜா தெரிவித்துள்ளார்.

கோவையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பிரதமர் மோடியின் நலத்திட்டங்கள் மக்களின் மனதை வென்றுள்ளன. டில்லி சட்டப்பேரவைத் தேர்தலில் 27 ஆண்டுகளுக்குப் பிறகு பா.ஜ.க. மீண்டும் வெற்றி பெற்றுள்ளது.

ஆம் ஆத்மி கட்சி ஆரம்ப கட்டத்தில் மிகவும் எளிமையாக இருந்தவர்கள். இன்று ஊழல் செய்து ஆடம்பரமாக உள்ளனர்.

நாட்டிற்கு எதிராக கருத்துகளை தெரிவித்து வந்த காங்கிரஸ் கட்சி தற்போது துடைத்து எறியப்பட்டுள்ளது.

டில்லியில் உள்ள தமிழர் பகுதிகளில் நானும், பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலையும் சென்ற போது அங்குள்ள தமிழர்கள் மத்தி



யிலும், பா.ஜ.கவிற்கு ஆதரவு அதிகரித்துள்ளது என்பதை நேரில் பார்க்க முடிந்தது. இடைத்தேர்தலில் பொதுவாக ஆளும் கட்சி தான் வெற்றி பெறும். ஆனால் பணத்தை வழங்கி தி.மு.க. வெற்றி பெற்றுள்ளது. இதனை பெரும் வெற்றியாக தி.மு.க. கருத முடியாது." – என்றார்.



# சீனாவில் நிலச்சரிவில் சிக்கி ஒருவர் பலி; 28 பேர் மாயம்

சீனாவின் தென்மேற்கு பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார். 28 இற்கும் மேற்பட்டோர் காணாமல் போயுள்ளனர் என சீன ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இந்த நிலச்சரிவில் பல வீடுகள் மண்ணுக்குள் புதையுண்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பகுதியில் உள்ள மக்களை உடனடியாக வெளியேறுமாறு சீனாவின் ஜனாதிபதி ஜி ஜின்பிங் அறிவித்துள்ளார்.



இந்த பகுதியில் உள்ள 200 இற்கும் அதிகமான குடும்பங்கள் இதுவரையில் அங்கிருந்து வெளியேறியுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அங்கு தற்போது மீட்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், உயிரிழப்புகளின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடிய சாத்தியம் நிலவுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# போரை முடிவுக்குக் கொண்டு வர டொனால்ட் ட்ரம்ப் - புடினுடன் பேச்சு

உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்கில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமர் புட்டினுடன் தாம் கலந்துரையாடியுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையேயான போரில் 2,000,000 பேர் எந்த வித காரணமுமின்றி உயிரிழந்துள்ளனர் என ட்ரம்ப் கூறியுள்ளார்.

உக்ரைனுக்கு அமெரிக்கா, ஜேர்மனி உள்ளிட்ட நாடுகளின் ஆதரவைக் கோரி வருகின்றது.

இதற்கேற்ப, அந்த நாடுகளும் இராணுவம் மற்றும் நிதி உதவியை வழங்கி வருகின்றன.





இந்நிலையில், உக்ரைனுக்கு எதிரான போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக ரஷ்ய ஜனாதிபதியுடன் கலந்துரையாடியுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் ஊடகம் ஒன்றிற்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.

ஜோ பைடனை போல அல்லாமல், புடினுடன் எப்போதும் நல்ல முறையிலான நட்புறவைத் தாம் தொடர்ந்து வருவதாக ட்ரம்ப் கூறியுள்ளார்.



# காசாவின் முக்கிய பகுதியிலிருந்து படைகளைத் திரும்பப் பெற்ற இஸ்ரேல்!

காசாவின் தென் பகுதியிலிருந்து தமது சொந்த இருப்பிடங்களை நோக்கிச் செல்லும் மக்கள் படையினரின் எந்தவித சோதனையுமின்றி அனுமதிக்கப்படுகின்றனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இஸ்ரேல் – ஹமாஸ் இடையே ஏற்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்து இரு தரப்பும் பணயக் கைதிகளை விடுவித்து வருகின்றன.

இதுவரை 5 முறை பணயக் கைதிகள் பரிமாற்றம் நடந்துள்ளது.

அதேபோல், காசாவில் நடந்த போர் காரணமாக இடம்பெயர்ந்த பாலஸ்தீனியர்கள் தங்கள் பகுதிகளுக்குத் திரும்புவதற்கும் அனுமதிக்கப்படுகின்றனர்.







# இன்றைய ராசி பலன்கள் - 10.02.2025




இன்று உங்களுக்கு சாதகமான நாள். நம்பிக்கை நிறைந்து காணப்படும் நாள். கடின உழைப்புக்கு வெற்றி கிடைக்கும் நாள். நீங்கள் எடுக்கும் முடிவுகள் நல்ல பலன்களை அளிக்கும்.

பணியிடத்தில் திருப்தியான சூழல் காணப்படும். கடினமான உழைப்பின் மூலம் நற்பெயரும் அதன் மூலம் நன்மதிப்பும் பெறுவீர்கள்.

உங்கள் குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும். உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை பராமரிப்பீர்கள்.

இன்று நிதிநிலையில் அதிர்ஷ்டம் காணப்படும். உங்கள் பணத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள். அதிர்ஷ்டம் காரணமாக நிதிநிலையில் முன்னேற்றம் காணப்படும்.




இன்று முன்னேற்றகரமான நாளாக இருக்காது. நீங்கள் உற்சாகத்தையும் மகிழ்ச்சியையும் கடைபிடிக்க வேண்டும். எது நடக்கிறதோ அதை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும். இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக அமைய இறை வழிபாடு மற்றும் பிரார்த்தனையை மேற்கொள்ளுங்கள்.

அதிகப் பணிகள் காரணமாக அதிருப்தி காணப்படும். உங்கள் மேலதிகாரிகளுடன் பிரச்சினைகளை சந்திப்பீர்கள்.பணிகள் அதிகம் காணப்படுவதால் ஒய்வு கிடைப்பது அரிது.

உங்கள் மனதில் குழப்பமான உணர்வுகள் காணப்படும். இதன் காரணமாக உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

இன்று பணபுழக்கம் குறைந்து காணப்படும்.




இன்று உங்கள் இலக்குகளில் வெற்றி கிடைக்கும் நாள். உங்களின் நேர்மையான முயற்சி மூலம் உங்கவிடம் மறைந்திருக்கும் திறமைகளை நீங்கள் உணரும் நாள். இன்று முக்கிய முடிவுகளை நீங்கள் எடுக்கலாம்.

உங்கள் செயல் திறனில் உங்கள் திறமை வெளிப்படும். நீங்கள் தொடர்ந்து கடின முயற்சி செய்து உங்கள் திறமைகளை மேம்படுத்துவீர்கள்.

உங்கள் இருவரிடையே புரிந்துணர்வு குறைந்து காணப்படும். இதனால் உறவில் திருப்தியான நிலை இருக்காது.

இன்று பணப் புழக்கம் அதிகமாக காணப்படும். இந்தப் பணத்தை ஆடம்பரப் பொருள்கள் வாங்கப் பயன்படுத்தலாம்.




இன்று மந்தமான நிலையே காணப்படும். உங்கள் வளர்ச்சியை பாதிக்கும் தேவையற்ற உணர்வுகளுக்கு இடம் அளிக்காதீர்கள். அமைதியாக இருந்து எதையும் லேசாக எடுத்துக் கொள்ளுங்கள். உங்கள் குழந்தைகளின் வளர்ச்சி குறித்த கவலை காணப்படும்.

உங்களிடம் காணப்படும் தன்னம்பிக்கை காரணமாக கடினமான பணிகயும் விரைவாக செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடாதீர்கள். உங்கள் பிரச்சனைகளை நட்புடன் பேசி தீர்த்துக் கொள்ளுங்கள்.

பொறுப்புகளும் பணத் தேவைகளும் அதிகமாகக் காணப்படும். அது உங்களை வருத்தாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.




இன்று உங்களுக்கு ஆக்கப் பூர்வமான நாள், இன்று ஆற்றலும் உறுதியும் நிறைந்து காணப்படுவீர்கள். இன்று எடுக்கும் புதிய முயற்சிகள் வெற்றியை அளிக்கும்.

பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் பொறுமையுடன் பணிகளைக் கையாள வேண்டும். உங்கள் சக பணியாளர்களிடம் பேசும் போது பொறுமை தேவை.

உங்கள் துணையிடம் நட்புணர்வுடன் நடந்து கொள்வீர்கள். இதனால் உறவின் சிறப்பை உங்கள் துணை உணர்ந்து கொள்ள இயலும்.

நிதிநிலை சிறப்பாக காணப்படும் நாள். உங்கள் தேவைகள் பூர்த்தியடையும். நீங்கள் அதிக பணம் சேமிப்பீர்கள்.




இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். முக்கியமான செயல்களை வேறு ஒரு நாளைக்கு தள்ளிப்போடவும். எந்த சூழ்நிலையிலும் நம்பிக்கை இழக்காதீர்கள்.

நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள். இன்று பணியில் மூழ்கி இருப்பீர்கள். முறையாக திட்டமிடுவதன் மூலம் சிறப்பாக பணியாற்றலாம்.

உங்கள் துணையுடன் பேசும் பொது அமைதியுடனும் கட்டுப்பாட்டுடனும் இருங்கள். இதன் மூலம் கண்டிப்பாக இருவரிடையே மகிழ்ச்சி நிலவும்.

பயணத்தின் போது பணத்தை கவனமாகக் கையாளவும். கையில் அதிக பணத்தை எடுத்துச் செல்ல வேண்டாம்.

உங்களிடம் காணப்படும் சிறந்த ஆற்றல் காரணமாக இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படுகின்றது.




இன்று சற்று மந்தமான நாளாக இருக்கும். சவால்கள் நிறைந்து காணப்படும் நாள் என்பதால் உங்கள் உணர்வுகளை கட்டுபடுத்த வேண்டும். மனக் குழப்பங்களை நீக்கி தெளிவாக இருக்க வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. பணிகளைக் கையாள்வதை கடினமாக உணர்வீர்கள்.

உங்களின் நேர்மறையான உணர்வுகள் காரணமாக உங்கள் துணையிடம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்வீர்கள். இதனால் உறவில் அமைதியும் திருப்தியும் நிலவும்.

அதிக பணம் சம்பாதிக்கும் வாய்ப்பும் கணிசமான தொகை சேர்க்கும் வாய்ப்பும் இன்று குறைவு.




இன்று உங்கள் இலக்குகளில் வெற்றி கிடைக்கும் நாள். உங்களின் நேர்மையான முயற்சி மூலம் உங்களிடம் மறைந்திருக்கும் திறமைகளை நீங்கள் உணரும் நாள். இன்று முக்கிய முடிவுகளை நீங்கள் எடுக்கலாம்.

உங்கள் செயல் திறனில் உங்கள் திறமை வெளிப்படும். நீங்கள் தொடர்ந்து கடின முயற்சி செய்து உங்கள் திறமைகளை மேம்படுத்துவீர்கள்.

உங்கள் இருவரிடையே புரிந்துணர்வு குறைந்து காணப்படும். இதனால் உறவில் திருப்தியான நிலை இருக்காது.

இன்று பணபுழக்கம் அதிகமாக காணப்படும். இந்தப் பணத்தை ஆடம்பரப் பொருள்கள் வாங்கப் பயன்படுத்தலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 10.02.2025




இன்று முன்னேற்றகரமான நாளாக இருக்காது. நீங்கள் உற்சாகத்தையும் மகிழ்ச்சியையும் கடைபிடிக்க வேண்டும். எது நடக்கிறதோ அதை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும். இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக அமைய இறை வழிபாடு மற்றும் பிரார்த்தனையை மேற்கொள்ளுங்கள்.

அதிகப் பணிகள் காரணமாக அதிருப்தி காணப்படும். உங்கள் மேலதிகாரிகளுடன் பிரச்சினைகளை சந்திப்பீர்கள்.பணிகள் அதிகம் காணப்படுவதால் ஓய்வு கிடைப்பது அரிது.

உங்கள் மனதில் குழப்பமான உணர்வுகள் காணப்படும். இதன் காரணமாக உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிப்பதை கடினமாக உணர்வீர்கள்.




இன்று வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் சாதகமான நாள்.குறைந்த முயற்சியில் அதிக வெற்றி பெறுவீர்கள். இன்று நம்பிக்கை உணர்வுடன் இருப்பீர்கள். இதனால் நன்மை ஏற்படும்.

இன்று முக்கிய சந்திப்புகளில் கலந்து கொள்வதில் மும்மரமாக இருப்பீர்கள். உங்கள் கருத்துக்களை தெளிவாக எடுத்துச் சொல்வீர்கள். இது உங்கள் சகபணியாளர்களுக்கு ஆச்சரியம் அளிக்கும்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை கொள்வீர்கள். இது அவரை மகிழ்விக்கும். எனவே பொதுவாக இருவரிடமும் மகிழ்ச்சி காணப்படும்.

இன்று நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். உங்கள் சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும்.

நீங்கள் ஸ்திரமான ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள். தேக ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்கும்.




உங்களின் சமயோசித புத்தி மற்றும் புத்திசாலித்தனம் காரணமாக இன்று பயனுள்ள பலன்கள் சாத்தியம். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

இன்று நீங்கள் சிறப்பாக செயலாற்றுவீர்கள். உங்கள் செயல் திறன் அசர வைக்கும். உங்கள் முயற்சிக்கு மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். குடும்ப பிரச்சினைகளை கலந்தாலோசித்து சுமூகமான தீர்வு காணுவீர்கள்.

பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்வீர்கள். பூர்வீகசொத்து மூலம் பணவரவு வர வாய்ப்புள்ளது.

உங்கள் நேர்மறை எண்ணம் மற்றும் மனஉறுதி காரணமாக இன்று நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




இன்று இனிமையான நாள். உங்களுக்கு சாதகமான பலன்கள் கிடைக்கும் நாள். உங்கள் செயல்களை எளிதாக முடிப்பீர்கள். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும் அதிர்ஷ்டமான நாள்.

உங்கள் செயல்திறனுக்கு உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும். உங்கள் பணிகளை சிறந்த தரத்துடன் முடித்து தருவீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்துவீர்கள். இதன் மூலம் நல்ல புரிந்துணர்வு தக்க வைத்துக் கொள்ள முடியும்.

இன்று பண வரவு சிறப்பாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு உயரும். நீங்கள் இன்று புதிய முதலீடுகளை செய்யலாம். அது லாபகரமாக இருக்கும்.



# தாயை இழந்த ஆட்டுக்குட்டிக்கு பாசத்துடன் பாலூட்டுகின்ற நாய்

## எழுதுமட்டுவாள் கிராமத்தில் நெகிழ்ச்சிச் சம்பவம்

(த.சுபேசன்)

தென்மராட்சி எழுதுமட்டுவாள் கிராமத்தில் தாயை இழந்த ஆட்டுக்குட்டிக்கு நாய் ஒன்று பால் கொடுக்கும் நெகிழ்ச்சியான சம்பவம் இடம்பெற்று வருகின்றது.

தாய் ஆடானது குட்டி ஈன்ற பின்னர் உயிரிழந்த நிலையில் அண்மையில் குட்டி ஈன்ற நாய் தாயை இழந்த ஆட்டுக் குட்டியின் பசியைப் பாலூட்டி போக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.